மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.
2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 01ம் நாள் வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண்.05/2024
இன்
அசல் வழக்கு எண்.23/2023
------

இ. முத்துராமலிங்கபுரம் கிராமத்திலிருக்கும்
அருள்மிகு சக்க தேவி கோவில்
அதன் பரம்பரை பூசாரியும்,
கம்பளத்து நாயக்கர் சமுதாயத்தினரின்
பிரதிநிதியுமான திரு. ச. முத்தையா மூலம் .. மனுதாரர்/வாதி

/எதிர் /

1. சக்கரைச்சாமி
த/பெ. முத்துராமலிங்கம்
2. ஆறுமுகம்
த/பெ. சந்தன மகாலிங்கம்
3. கந்த வேலம்மாள்
க/பெ. குஞ்சில்சாமி
4. சங்கரவேல்
5. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
விருதுநகர்.
6. ச. சக்கரைச்சாமி
த/பெ. மகாலிங்கம்
7. ஆ. முத்துப்பாண்டி
க/பெ. ஆறுமுகம்
8. மா. கந்தசாமி,
த/பெ. மாரிமுத்து
9. மு. அழகுமூர்த்தி
த/பெ. முத்துராமலிங்கம் ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது என் முன்பு 16.07.2025–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி. கா. கஸ்தூரிபாண்டி அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்

திரு. D. பாஸ்கரன், அவர்கள் ஆஜராகியும், 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை, மனு அபிடவிட்டு, எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

இம்மனுவானது 31.01.2024 அன்று மனுதாரர்/வாதி நீதிமன்றம் முன்பு ஆஜராகாததாலும், பிராதினை சீர்திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்யாததாலும் அசல் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டதை ரத்து செய்து அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து உத்தரவிடக்கோரி கட்டளை 9 விதி 9 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்/ வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-**

**2.1.** மனுதாரர்/வாதி அசல் வழக்கின் தபசில் சொத்தான சக்கதேவி கோயிலை எட்டு கிராமங்களைச் சேர்ந்த கம்பளத்து நாயக்கர் சமுதாய மக்களுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்திடவும், இன்ன பிற பரிகாரங்கள் கோரியும் தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில், 6 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தங்களையும் அசல் வழக்கிலும் இ.ம.எண்.02/2023-லும் தரப்பினர்களாக சேர்த்து வழக்கினை மேல் நடத்தக்கோரி இ.ம.எண்.03/2023 மற்றும் இ.ம.எண்.04/2023 ஆகியவற்றை தாக்கல் செய்திருந்தனர். மேற்படி இரண்டு மனுக்களும் அனுமதித்தும், அதனைத் தொடர்ந்து பிராதினை திருத்தம் செய்யவும் உத்தரவிட்டுள்ளது.

**2.2.** இந்நிலையில் மனுதாரரின் வயோதிகத்தினாலும் நோயினாலும் படுக்கையை விட்டு மனுதாரரால் எழுந்திருக்க முடியாத நிலையினாலும், வழக்கறிஞரை சந்தித்து 6 முதல் 9 எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்கப்பட்ட உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு செய்யவோ, பிராதினை சீர்திருத்தம் செய்யவோ வழக்கறிஞருடன் கலந்து ஆலோசிக்க முடியாமலும், ஆவண செய்ய முடியாமலும் போனது. அதன் பொருட்டு கடந்த 31.01.2024 அன்று மனுதாரர்

ஆஜராக வேண்டி வழக்கை ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. இது குறித்து தகவலையும் மனுதாரரால் கேட்டு பெற கூட இயலாத நிலையில் மனுதாரரின் உடல்நலம் குன்றியிருந்தது. கடந்த 31.01.2024 அன்று மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகாததற்கும், பிராதினை சீர்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்காததற்கும் அவரது வயோதிகமும் உடல் நலக்குறைபாடுமே காரணமே தவிர வேறொன்றுமில்லை. மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. மேலும் இம்மனு அனுமதிக்கப்படுவதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித நியாயமான ஆட்சேபணையும் இருக்கப்போவதில்லை. இம்மனு அனுமதிக்கப்படாத பட்சத்தில் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படக்கூடும். எனவே அசல் வழக்கானது தள்ளுபடி செய்து உத்தரவிட்டதை ரத்து செய்து மீண்டும் வழக்கை மேல் நடத்த உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல்.

3) **<u>4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் மற்றும் 6 முதல் 9 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>**:–

**3.1.** இதனடியில் வியக்தமாய் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளைத் தவிர இதர சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானவைகள் மற்றும் கற்பனையானவைகள் ஆகும். அவற்றை மனுதாரரே நிருபிக்க வேண்டும். இந்நிர் எதிர்மனுதாரர் மற்றும் 6 முதல் 9 எதிர்மனுதாரர்கள் வகையறாக்கள் அருள்மிகு சக்கதேவி கோவில் வழிபடுவோர் சங்கம் இ. முத்துலிங்காபுரம் என்பதனை நிறுவி அந்த சங்கத்தினை 117/2021 என்ற எண்ணாக பதிவு செய்திருக்கிறார்கள். இந்நிர் எதிர்மனுதாரர்கள் அருள்மிகு சக்கதேவி கோவிலினையும், கோவிலில் உள்ள சக்கதேவி மற்றும் சின்னன் சிலைகளை காலம்தொட்டு வழிபட்டு அனுபவித்து வருகின்றார்கள். இதற்கிடையில் 1ம் மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்கள் மற்றும் மேற்சொன்ன சங்கத்தினை சார்ந்தவர்களையும் அருள்மிகு சக்கதேவி கோவிலினை வழிபடுவதற்கு இடைஞ்சல் செய்ய முயற்சித்தும், அருள்மிகு சக்கதேவி

கோவிலினை ஆக்கிரமிக்க முயற்சி செய்து அவருக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்ட கோவிலாக மாற்ற முயற்சி செய்து வருகின்றார்.

**3.2.** மேற்படி கோவிலினை வழிபடுவதற்கும், விழாக்காலங்களில் பராமரிப்பு செய்வதற்கும் இந்நிர் எதிர்மனுதாரர்களுக்கும் 6 முதல் 9 எதிர்மனுதாரர்களுக்கும் உரிமை மற்றும் அனுபவம் இருக்கின்றது. எனவே மேற்படி 6 முதல் 9 எதிர்மனுதாரர்களை தாவா வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்க்க அவர்களது தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது அனுமதிக்கப்பட்டு 6 முதல் 9 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் சேர்த்தும், பிராதினை சீர்திருத்தம் செய்யவும் உத்தரவிட்டது. மேற்படி எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் சேர்த்து வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய நீதிமன்றம் போதுமான கால அவகாசம் அளித்தும் மனுதாரர்/வாதி மனு செய்யாமல் மேற்படி வழக்கானது கடந்த 31.01.2024 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

**3.3.** மனுதாரர் தாவா மனுவினை வேண்டுமென்றே காலதாமதம் செய்ய வேண்டுமென்பதற்காகவும், எதிர்மனுதாரர்களை வீண் அலைக்கழிப்பு செய்ய வேண்டுமென்பதற்காகவும் கோவில் விழாக்காலங்களில் எதிர்மனுதாரர்கள் வாதி கோவிலில் வழிபடுவதனை இடைஞ்சல் செய்ய வேண்டுமென்பதற்காகவும், எதிர்மனுதாரர்களின் உரிமைகளை இடைஞ்சல் செய்ய வேண்டுமென்பதற்காகவும் தாக்கல் செய்துள்ளார். எனவே தாவா அசல் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டதை ரத்து செய்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. எனவே மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. மனுதாரரின் மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு ஏராளமான கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுவதாய் உள்ளது. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நிர் எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

4. **<u>5ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆட்சேபைணயின் சுருக்கம் –</u>**

**4.1.** தாவா மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் இ.ம.எண்.02/2023 முதல் இ.ம.எண்.04/2023 ஆகிய மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுக்கள் அனுமதித்து உத்தரவாகியுள்ளது. இந்நிலையில் மேற்படி மனுக்களை தொடர்ந்து அசல் வழக்கினை சீர்திருத்தம் செய்ய போதிய காலஅவகாசம் வழங்கியும் உரிய நடவடிக்கை எடுக்காமல் இருந்துவிட்டதால் அசல் வழக்கினை கடந்த 31.01.2024 அன்று மனுதாரர்/வாதியை அழைத்தும் வராததாலும், உரிய நடவடிக்கை எடுக்காததாலும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது. தாவா மனுவில் மனுதாரருக்கு வயோதிகத்தினால் நோயினால் படுக்கையைவிட்டு எழுந்திருக்க முடியாத நிலையினாலும் வழக்கறிஞர் அவர்களை சந்தித்து உரிய மனு தாக்கல் செய்ய இயலவில்லை என்று கூறியுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை. எனவே மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

5. மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத் தக்கதா?

6. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**7. <u>தீர்வு</u>**

**6.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. கடந்த 31.01.2024 அன்று தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவிட வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவிற்கு மனுதாரர் கூறும் காரணம் என்னவென்றால் மனுதாரரது வயோதிகத்தினாலும், நோயினாலும் படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியாத நிலையினால் வழக்கறிஞரை சந்தித்து

கலந்து ஆலோசிக்க முடியாத நிலை ஏற்பட்டதால் 31.01.2024 அன்று வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**6.2.** எதிர்மனுதாரர்கள் தங்களுடைய எதிருரையில், மனுதாரர் தாவா மனுவினை வேண்டுமென்றே காலதாதம் செய்ய வேண்டுமென்பதற்காகவும், இந்நிர் எதிர்மனுதாரர்களை வீண் அலைக்கழிப்பு செய்ய வேண்டுமென்பதற்காகவும் எதிர்மனுதாரர்கள் வாதி கோவிலில் வழிபடுவதனை இடைஞ்சல் செய்ய வேண்டுமென்பதற்காகவும் தாக்கல் செய்துள்ள மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், மனுதாரரின் மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு ஏராளமான கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும் என்றும், மனுதாரருக்கு வயோதிகத்தினால், நோயினால் படுக்கையைவிட்டு எழுந்திருக்க முடியாத நிலையினாலும் வழக்கறிஞரை சந்தித்து உரிய மனு தாக்கல் செய்ய இயலவில்லை என்று கூறியுள்ளது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றும், எனவே மனுதாரரின் மனுவினை எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டப்பட்டுள்ளது.

**6.3**. மனு மற்றும் எதிருரையை பரிசீலனை செய்து பார்த்ததில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மனுதாரர்/வாதிக்கு தனது தரப்பை நிரூபணம் செய்வதற்காக ஒரு வாய்ப்பை வழங்க வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என்றும், தவறும்பட்சத்தில் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும் நஷ்டமும் ஏற்படக்கூடும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**7. இறுதி முடிவு**

இறுதியாக, இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01—ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**சாட்சி, சான்றாவணங்கள்**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**

இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்டஉரிமையியல் நீதிமன்றம்,
சாத்துூர்.
இ.ம.எண்.05/2024
இன்
அ.வ.எண்.23/2023
**உத்தரவு**
நாள்–01.08.2025.